09.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### காரைக்குடியில் பலத்த மழை

காரைக்குடியில் ஞாற்றுக்கிழமை மாலை பலத்த மழை பெய்தது.

காரைக்குடியில் கடந்த சில தினங்களாக வெயில் வாட்டி வந்தது. வெப்பத்தால் மக்கள் அவதிப்பட்டு வந்தனர். ஞாயிற்றுக்கிழமையும் மதியம் வரை வெயில் கொளுத்தியது. மாலை 3 மணிக்கு மேகமூட்டம் ஏற்பட்டது. மாலை 6 மணியளவில் தொடங்கி சுமார் 45 நிமிஷங்கள் பலத்த மழை பெய்தது.

இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழையால் வெப்பம் தணிந்து நகரில் குளிர்ச்சி நிலவியது.

### ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரிப்பு பயிற்சி

திருவாடானை அருகே கங்கை விலாசம் மற்றும் சிறுமலைக்கோட்டை கிராமங்களில் மானாவாரி பகுதி பயிர்களுக்கு ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிப்பு முகாம் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குனர் கெர்சோன் தங்கராஜ் தலைமை வகித்தார். அவர் பேசுகையில் ஒரு ஏக்கருக்கு தேவையான மணிச்சத்தினை வழங்ககூடிய 62.5 கிலோ சூப்பர் பாஸ்பேட், 300 கிலோ மக்கிய தொழு உரம் ஆகிய இரண்டையும் சம பங்காக கலந்து சிறிது நீர்விட்டு கிளரி புட்டுமாவு பதத்தில் கலவை தயாரிக்க வேண்டும். பின்பு காற்றுப் புகாத அளவில் களிமண்ணால் அல்லது பிளாஸ்டிக் பைகளில் 30 நாள்கள் அடைத்து வைக்க வேண்டும். இவ்வாறு ஊட்டமேற்றிய தொழுஉரத்தை தயாரித்து பயன் படுத்தி உரச்செலவை மிச்சப் படுத்தலாம். மேலும் ஊட்டமேற்றிய தொழு உரத்தை மானாவாரி நிலங்களுக்கு இடுவதால் பயிர் வேர் வளர்ச்சி அதிகரிக்கிறது. வறட்சியைத் தாங்கி வளர்கிறது.

நிலத்தில் உள்ள மணிச்சத்து பயிருக்கு கிடைத்து மகசூல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்றார். வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள சான்று பெற்ற நெல் விதைகள், உயிர் உரங்கள், நுண் உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து வேளாண்மை அலுவலர் பாக்கியராஜ் எடுத்துரைத்தார். துணை வேளாண்மை அலுவலர் பாண்டியன் நன்றி கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர்கள் செளமியா, டயானா ஆகியோர் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

திருவாடானை அருகே கங்கை விலாசம் மற்றும் சிறுமலைக்கோட்டை கிராமங்களில் மானாவாரி பகுதி பயிர்களுக்கு ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிப்பு முகாம் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குனர் கெர்சோன் தங்கராஜ் தலைமை வகித்தார். அவர் பேசுகையில் ஒரு ஏக்கருக்கு தேவையான மணிச்சத்தினை வழங்ககூடிய 62.5 கிலோ சூப்பர் பாஸ்பேட், 300 கிலோ மக்கிய தொழு உரம் ஆகிய இரண்டையும் சம பங்காக கலந்து சிறிது நீர்விட்டு கிளரி புட்டுமாவு பதத்தில் கலவை தயாரிக்க வேண்டும். பின்பு காற்றுப் புகாத அளவில் களிமண்ணால் அல்லது பிளாஸ்டிக் பைகளில் 30 நாள்கள் அடைத்து வைக்க வேண்டும். இவ்வாறு ஊட்டமேற்றிய தொழுஉரத்தை தயாரித்து பயன் படுத்தி உரச்செலவை மிச்சப் படுத்தலாம். மேலும் ஊட்டமேற்றிய தொழு உரத்தை மானாவாரி நிலங்களுக்கு இடுவதால் பயிர் வேர் வளர்ச்சி அதிகரிக்கிறது. வறட்சியைத் தாங்கி வளர்கிறது.

நிலத்தில் உள்ள மணிச்சத்து பயிருக்கு கிடைத்து மகசூல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்றார். வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள சான்று பெற்ற நெல் விதைகள், உயிர் உரங்கள், நுண் உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து வேளாண்மை அலுவலர் பாக்கியராஜ் எடுத்துரைத்தார். துணை வேளாண்மை அலுவலர் பாண்டியன் நன்றி கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர்கள் செளமியா, டயானா ஆகியோர் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

## வடசென்னைக்கு 1000 டன் நெல்

நீடாமங்கலத்திலிருந்து வடசென்னை மண்டலத்திற்கு ஆயிரம் டன் பொது மற்றும் சன்ன ரக நெல் மூட்டைகள் அரவைக்காக சரக்கு ரயிலில் திங்கள்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை ஆகியவற்றிலிருந்து ஆயிரம் டன் எடையுள்ள பொது மற்றும் சன்னரக நெல் மூட்டைகள் 75 லாரிகளில் நீடாமங்கலம் ரயில் நிலையத்திற்கு திங்கள்கிழமை கொண்டுவரப்பட்டது.

இந்த நெல் மூட்டைகள் அரவைக்காக வடசென்னை மண்டலத்திற்கு சரக்கு ரயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

## தோட்டக்கலைப் பயிர்களுக்கு மானியம்: வேளாண் மையங்களில் விண்ணப்பிக்கலாம்

தோட்டக்கலைப் பயிர்களுக்கு மானியத் திட்டத்தில் பயன்பெறும் விவசாயிகள் வேளாண் மையங்களில் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து, விழுப்புரம் தோட்டக்கலைத் துணை இயக்குநர் மணிமொழி வெளியிட்ட செய்திக் குறிப்பு: தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை மூலம் நடப்பாண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் பயனாளிகள், தேர்வு முகாம் செவ்வாய்க்கிழமை (ஆக.9) தொடங்கி, இரு தினங்கள் நடைபெறுகிறது. அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இதற்கான விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றன. பப்பாளி, கறிவேப்பிலை, பாக்கு மற்றும் வெற்றிலை போன்ற தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்வதற்கு மானியம் வழங்கப்படுகிறது. பந்தல் அமைப்புகள், கைத்தெளிப்பான்கள், விளக்குப்பொறி, இனக்கவர்ச்சிப் பொறி, மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறி, தேனி வளர்ப்பு, நிழல் வலைக்குடில், மஞ்சள் நாற்றாங்கால் உள்ளிட்ட பல இனங்களுக்கு இத்திட்டத்தில் மானியம் வழங்கப்படுகிறது. இது தொடர்பான விளக்கங்கள், இரு தினங்கள் நடைபெறும் முகாம்களில்

அளிக்கப்படும். ஆர்வமுள்ள விவசாயிகள் பங்கேற்று, விண்ணப்பிக்குமாறு அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### இந்தியாவின் விதை நகரம்

'ஆடிப்பட்டம் தேடி விதை' என்பது பழமொழி. இந்தியாவில் பாரம்பரிய விதைகளுக்கான வங்கி 'நவதான்யா வங்கி' என்ற பெயரில் டேராடூனில் உள்ளது. ஆனால் மரபணுமாற்ற விதைகளை வர்த்தகம் செய்யும் நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் உள்ள ஜால்னா நகரம் 'இந்தியாவின் விதை நகரம்' என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது. மகாராஷ்டிராவில் மரத்வாடா பகுதியில் குண்டலிகா நதிக்கரையில் ஜால்னா உள்ளது. இவை தவிர பூரணா நதியும், கோதாவரி நதியும் ஜால்னாவிற்கு வளம் சேர்க்கின்றன. நீர்வளம் இருந்தாலும் ஜால்னா பாரம்பரிய இயற்கை விதைகளில் கவனம் கொள்ளாமல் மரபணு மாற்ற விதைகள் உருவாக்கம், வர்த்தகத்தில் தான் கவனம் செலுத்துகிறது.

### நெல் நடவு இயந்திரத்திற்கு மானியம் அதிகரிப்பு

மொடக்குறிச்சி: மொடக்குறிச்சி வேளாண் உதவி இயக்குனர் ஜெயராமன் விடுத்துள்ள அறிக்கை: நடவு இயந்திரம் மூலம் நெற்பயிர் நடவு செய்த விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைத்துள்ளது. இயந்திரத்தைப் பயன்படுத்த கடந்த ஆண்டு, ஹெக்டருக்கு, 3,000 ரூபாய் தமிழக அரசு மானியமாக வழங்கியது. நடப்பாண்டில், 5,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கோ.ஆர்.-50, பி.பி.டி., உள்ளிட்ட ரக நெல், 40 டன் அளவில் கையிருப்பு உள்ளது. உயிர் உரங்களும் தேவையான அளவில் இருப்பு வைத்துள்ளோம். மேலும் தகவல் பெற, மொடக்குறிச்சி வேளாண்மைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## திண்டிவனத்தில் விவசாயிகளுக்கு இலவச விதை

திண்டிவனம்: திண்டிவனம் சர்வீஸ் அரிமா சங்கத்தின் சார்பில் ஆடிப்பெருக்கு விழாவை முன்னிட்டு, செஞ்சி பஸ் நிலையத்தில் விவசாயிகளுக்கு இலவச விதைகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.
திண்டிவனம் சர்வீஸ் அரிமா சங்கத்தலைவர் யுவராஜ் தலைமை தாங்கினார்.

வட்டாரத்தலைவர் முத்துராஜ்குமார், லயன்ஸ் டிரஸ்ட் சேர் மன் ஸ்மைல் ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில், உரு0க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும், விதைகள் வழங்கப்பட்டன.

அரிமா சங்க செயலாளர் குமார், பொருளாளர் கண்ணன், ஆனந்தகுமார், ரவி, பாரிநாதன், நூருல்லா, வடிவேல் கலந்து கொண்டனர்.

## ரூ.1 கோடிக்கு பருத்தி வர்த்தகம்

ராசிபுரம்: அக்கரைப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கியில், நேற்று நடந்த ஏலத்தில், 4,268 பருத்தி மூட்டைகள், ஒரு கோடி ரூபாய்க்கு ஏலம் போயின. ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு உட்பட்ட அக்கரைப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி வளாகத்தில், நேற்று பருத்தி ஏலம் நடந்தது. சுற்று வட்டார பகுதிகளிலிருந்து, விவசாயிகள், 60 கிலோ கொண்ட, 4,268 சுரபி ரக பருத்தி மூட்டைகளை ஏலத்திற்கு கொண்டு வந்தனர். அவை, குறைந்தபட்சம், 5,455 ரூபாய், அதிகபட்சம், 6,464 ரூபாய்க்கும் ஏலம் போயின. மொத்தம், ஒரு கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. திருச்செங்கோடு, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், சேலம் ஆகிய ஊர்களிலிருந்து வந்த வியாபாரிகள் பருத்தி மூட்டைகளை ஏலத்தில் எடுத்தனர்.

## மெட்டாலாவில் நேற்றிரவு கனமழை

நாமகிரிப்பேட்டை: மெட்டாலாவில், நேற்றிரவு கனமழை பெய்தது. நாமகிரிப்பேட்டை ஒன்றியம், மெட்டாலா மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளான கோரையாறு, ராஜாபாளையம், பிலிப்பாக்குட்டை, ஆயில்பட்டி, கப்பலூத்து, கட்டபுளியமரம் உள்ளிட்ட பகுதிகளில் நேற்றிரவு, 8 மணிக்கு மின்னலுடன் மழை பெய்யத் துவங்கியது. தொடர்ந்து, 45 நிமிடம் கன மழை பெய்தது. இதனால், சாலைகளில், வயல்களில் மழைநீர் தேங்கி நின்றது.

போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. தொடர்ந்து, 9.30 வரை தூறல் மழை பெய்தது. அதேபோல், நாமகிரிப்பேட்டை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான வெள்ளக்கல்பட்டி, சீராப்பள்ளி, உள்ளிட்ட பகுதிகளில் இரவு, 7 மணியில் இருந்து தூறலாக மழை பெய்தது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தென்னிந்திய தேயிலை உற்பத்தி பருவநிலை மாற்றத்தால் பாதிப்பு




புதுடெல்லி: மக்களவையில் வர்த்தக அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியதாவது: இந்திய தேயிலை உற்பத்தி கடந்த நிதியாண்டில் 1,233.14 மில்லியன் கிலோ உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 3 சதவீதம் அதிகரித்துள்ளது.

மொத்த உற்பத்தியில் சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் பங்களிப்பு 34 சதவீதமாகும். தென்னிந்திய தேயிலை உற்பத்தி சாதகமற்ற பருவநிலை மாற்றங்களால் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு 16.76 கிலோ தேயிலை மட்டுமே உற்பத்தியாகியுள்ளது என்றார்.

## வேர் அழுகல் நோய் தாக்குதலால் கத்தரிக்காய் மகசூல் பாதிப்பு

உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள எறையூர், எல்லைகிராமம், கூத்தனூர், பாளையம், புகைப்பட்டி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் அதிகளவு கத்தரிக்காய் பயிர் சாகுபடி செய்து வருகின்றனர். தற்போது அறுவடை நடைபெற்று வரும் நிலையில் கடந்த வாரம் உளுந்தூர்பேட்டை பகுதியில் மாலை நேரங்களில் பெய்து வந்த மழையினால் கத்தரிசெடியில் வேர் அழுகல் நோய் ஏற்பட்டது. இதனால் செடியில் இருந்த கத்தரிக்காய் அழுகிய நிலை ஏற்பட்டு செடியில் இருந்து உதிர்ந்து விழுந்து வருகிறது.

இதனால் கத்தரிச்செடி பயிரிட்டுள்ள விவசாயிகள் கடும் பாதிப்பு அடைந்துள்ளனர். நோய் தடுப்பு மருந்துகள் அடித்து வந்தாலும் இதனை தடுக்க முடியாததால் கத்திரி செடியின் மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். கத்தரி பயிரிட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் விரைந்து பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுத்து நோய் தடுப்பு மருந்துகள் வழங்க வேண்டும் என உளுந்தூர்பேட்டை பகுதி விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## டேனிஷ்பேட்டை ஏரி நிரம்பியதால் நிலத்தடி நீர்மட்டம் உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி

காடையாம்பட்டி : டேனிஷ்பேட்டை ஏரி நிரம்பியதால் அப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். காடையாம்பட்டியில் கடந்த வாரம் பலத்த மழை பெய்தது. இதனால் சேர்வராயன் மலை பகுதியையொட்டிய டேனிஷ்பேட்டை ஊராட்சி உள்கோம்பையில் சரபங்கா நதியில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பெருக்கெடுத்து ஓடிய வெள்ளநீரால் பெத்தேல் தரைப்பாலம் தண்ணீரில் அடித்து செல்லப்பட்டது.

இந்த மழைக்கு டேனிஷ்பேட்டை ஏரி முழுவதுமாக நிரம்பியது. அங்கிருந்து

கோட்டை ஏரிக்கு தண்ணீர் செல்கிறது. டேனிஷ்பேட்டை ஏரி நிரம்பியதால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இன்னும் ஓராண்டுக்கு தண்ணீர் பஞ்சம் இருக்காது என நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## உணவு பொருட்களில் கலப்படம் அதிகரிப்பு சிறுதானியங்களை குழந்தைகளுக்கு வழங்குவது அவசியம் கண்காட்சியில் அதிகாரி பேச்சு

ஆத்தூர் : உணவு பொருட்களில் கலப்படம் அதிகரித்துள்ளதால் குழந்தைகள் உடல் நலன் பாதிக்கப்படுகிறது. இதை தடுக்க சிறுதானிய உணவை குழந்தைகளுக்கு வழங்குவது அவசியம் என்று மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் அனுராதா பேசினார். சேலம் மாவட்டம் ஆத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம், கெங்கவல்லி, வாழப்பாடி தாலுகாக்களில் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்களின் சார்பில் பாரம்பரிய உணவுத் திருவிழா மற்றும் சிறுதானிய கண்காட்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை அலுவலர் டாக்டர் அனுராதா தலைமை வகித்து பேசியதாவது: எங்களின் பணி உணவு பொருட்களில் கலப்படங்களை கண்டறிந்து தடுத்தல் ஆகும். இன்றைக்கு நாம் உண்ணும் உணவு பொருட்களில் 100 சதவீத கலப்பட பொருட்களாகவே உள்ளன. இதனால் தான் நம்முடைய இளைய தலைமுறையினர் பல்வேறு உடல் உபாதைகளுக்குள்ளாகி வருகிறார்கள். நம்முடைய முன்னோர்கள் சிறுதானிய உணவுகளை உண்டு நன்றாக உழைத்ததால் தான் இன்றளவும் நல்ல திடகாத்திரமாக இருக்கிறார்கள். ஆனால், நம்முடைய வளர் இளம் குழந்தைகள் மிகவும் சோர்வடைபவர்களாக உள்ளதை பார்க்கிறோம்.

இன்றைக்கு வளர் இளம் பெண்கள் ரத்த சோகையின் கொடுமையில் சிக்கி தவிக்கிறார்கள். இதனை எல்லாம் வெல்ல நாம் நம்முடைய பாரம்பரிய உணவு பொருட்களையும், சிறுதானிய வகைகளையும் நம்முடைய குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும். எல்லோரும் எந்த வகையிலாவது முன்னேறுங்கள் என

கூறுவதை கேட்டுள்ள நாம் இன்றைக்கு நம்முடைய உணவு முறைக்காக மட்டும் பின்னோக்கி செல்ல வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

அந்த அளவிற்கு நம்முடைய உணவு பழக்க வழக்கங்கள் ஆபத்து விளைவிக்க கூடியதாக உள்ளது. எனவே, இங்கு காட்சியாக பார்த்துள்ள உணவு பொருட்களை நம்முடைய குழந்தைகளின் அன்றாட உணவாக கொடுக்கும் வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் ஆத்தூர் அரசு மருத்துவமனையின் தலைமை மருத்துவர் அசோக்குமார், மாவட்ட குழந்தைகள் நலத்துறை அலுவலர் பாரதி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## திருச்செங்கோட்டில் விவசாயிகள் ஆலோசனை கூட்டம்

திருச்செங்கோடு : திருச்செங்கோட்டில் அட்மா திட்டத்தின்கீழ் 2016-17ம் ஆண்டிற்கான வட்டார விவசாயிகளின் ஆலோசனை கூட்டம் வேளாண் விரிவாக்க மைய அலுவலகத்தில் நேற்று நடந்தது. அட்மா தலைவர் சதாசிவம் தலைமை வகித்தார். திருச்செங்கோடு உதவி வேளாண் இயக்குனர் குருலிங்கம் முன்னிலை வகித்தார். இதில், அட்மா வட்டார விவசாயிகள் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் மற்றும் அட்மா வட்டார தொழில்நுட்பக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், 2015-16க்கான நிதி நிலை அறிக்கை வாசிக்கப்பட்டது. துண்டுப்பிரசுரம் அடிப்பதற்கான திட்டங்கள் பெறப்பட்டன. இதில், தோட்டக்கலைத்துறை, கால்நடைத்துறை, மீன் வளத்துறை, பொறியியல்துறை, வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை, பட்டு வளர்ச்சித்துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் மானியத் திட்டங்கள் குறித்து விளக்கிக் கூறினர். இதற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

## அந்தியூர் வனப்பகுதியில் சந்தனமர நாற்றுகள் நடவு

சத்தியமங்கலம், : சத்தியமங்கலம் அருகே சிக்கரசம்பாளையம் கிராமத்தில் தமிழ்நாடு உயிர்பன்மை மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின் கீழ் கோபி மூங்கில் தோட்ட கோட்டம் சார்பில் வனப்பகுதியில் நடவு செய்ய தேவையான பல்வேறு வகை மர நாற்றுக்கள் வளர்க்கப்பட்டு வருகிறது. வனப்பகுதியில் நடவு செய்வதற்காக சந்தன மர நாற்றுக்களும் பதியன் போட்டு வளர்க்கப்பட்டுள்ளது.

சத்தியமங்கலம் புலிகள் காப்பக வனப்பகுதியில் மரங்களை நட்டு வளர்ப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதால் புலிகள் காப்பக வனப்பகுதியை தவிர்த்து மற்ற வனப்பகுதிகளில் சந்தன மர நாற்றுக்கள் நடவு செய்யப்படுகிறது. அந்தியூர் வனச்சரகத்திற்குட்பட்ட வனப்பகுதியில் சந்தன மர நாற்றுக்கள் நடவு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருவதாகவும் வனத்துறையினர் தெரிவித்தனர்.

இதுதவிர மலைவேம்பு மற்றும் தேக்கு மர நாற்றுக்கள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் சிட்டா, ஆர்எஸ்ஆர் மற்றும் இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப்படங்களை கொடுத்தால் அவர்களது நிலத்தில் வளர்க்க தேவையான நாற்றுக்களை வழங்குவதோடு மட்டுமின்றி தோட்டத்தில் வனத்துறையினரே நட்டு தருகின்றனர். இதில் நன்கு பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட மரங்களுக்கு 3 ஆண்டுகள் கழித்து ஒரு மரத்திற்கு ரூ.5.80 மானியத்தொகை வழங்கப்படுகிறது. தமிழக முதல்வரின் மரம் நடும் திட்டத்தின் கீழ் மலைவேம்பு, இலுப்பை, மகாகனி, நாவல், புங்கன், ஆயன், மகிழம், மந்தாரை, சொர்கம், புளியன், பொன்அவரை, தூங்குவாகை உள்ளிட்ட மர நாற்றுக்கள் வளர்க்கப்பட்டு வருகிறது. இந்த நாற்றுக்களை ஊரக வளர்ச்சித்துறை முலம் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும். அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ளாட்சி அமைப்புகள் நட்டு வளர்த்து பராமரிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக மூங்கில் கோட்ட வன அலுவலர் சேகர் தெரிவித்தார்.

**உழவர் உற்பத்தி மையம் துவக்கம்**

ஒரத்தநாடு: ஒரத்தநாட்டில் உழவர் உற்பத்தி மையம் துவங்கப்பட்டது. ஒரத்தநாட்டில் விவசாயிகள் தங்களுக்கு தேவையான உரம், பூச்சி மருந்து, விதைகள், விற்பனை செய்யவும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல், தேங்காய், கடலை உள்ளிட்ட தானியங்களை விற்பனை செய்யவும், கொள்முதல் செய்யவும், விவசாயிகளுக்கான உற்பத்தி மையம் ஒரத்தநாடு காவல் நிலையம் அருகே திறக்கப்பட்டது.

விற்பனை கூடத்தை தஞ்சை காவிரி டெல்டா உழவர் உற்பத்தியாளர் நிறுவன மேலாண் இயக்குனர் பன்னீர்செல்வம் திறந்து வைத்தார். ஒரத்தநாடு உழவர் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் ஓய்வுபெற்ற நீதிபதி சுப்பையன் குத்து விளக்கு

ஏற்றினார். உற்பத்தியாளர் மையத்தில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்று வருவதால் அனைத்து விவசாயிகளும் உறுப்பினர்களாக சேர்ந்து பயன்பெற கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

**ஊரணிபுரத்தில் பாசன நீர் மேலாண்மை பயிற்சி**

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டை அடுத்த திருவோணம் வட்டாரம் ஊரணிபுரத்தில் வேளாண்மைத்துறை மூலம் அட்மா விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டங்கள் எனும் பிரதான திட்டத்தின்கீழ் 40 விவசாயிகளுக்கு பாசன நீர் பராமரிப்பு மற்றும் பாசன நீர் மேலாண்மை முறைகள் குறித்த பயிற்சி நடந்தது. ஊராட்சி தலைவர் ரெத்தினம் பன்னீர்செல்வம் தலைமை வகித்தார். திருவோணம் வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி அலுவலர் சம்பத்குமார் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக முன்னாள் ஊராட்சி தலைவர் மதியழகன் கலந்து கொண்டார்.

தஞ்சாவூர் வேளாண்மை பொறியியல்துறை கண்காணிப்பு பொறியாளர் அலுவலக உதவி பொறியாளர் பன்னீர்செல்வம் பேசுகையில், கல்லணை, மேட்டூர் அணையின் பாரம்பரியத்தை பற்றியும் மற்றும் அதனால் பாசனம் பெறும் பகுதிகள் பற்றியும் பாசன நீர் அளவிடப்படும் முறைகளான கன அடி, டி.எம்.சி மற்றும் நொடிக்கு ஒரு கன அடி வீதம் ஓடும் நீரளவு பற்றியும் ஒரு கன அடி நீர் ஒரு மணி நேரம் பாயும்போது ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு இன்ச் நீர் கட்ட முடியும் என்ற அடிப்படை விவரத்தினை விளக்கிக் கூறினார்.

மேலும் கிராமத்தில் கிடைக்கும் நீர் ஆதாரங்களை கருத்தில் கொண்டு காரைக்குடியில் விவசாயிகள் குழு அமைத்து கண்மாய் நீரினை முறைபடுத்தி பங்கீட்டு முறையில் நீர் விரையம் ஆகாமல் அனைத்து விவசாயிகளும் பயன்பெறத் தக்கவகையில் பாசனம் பெறும் முறையினை கையாண்டு சாதனை நிகழ்த்தி வருவது போன்று இங்கும் நடைமுறைபடுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

திருவோணம் வேளாண்மை அலுவலர் சிவக்குமார் பேசுகையில், விவசாயிகள் தனியார் நிறுவனங்களில் விதைகள் வாங்கும் போது விதைநிலை, தரம், மூட்டையின் எடை, விதைக்கான ரசீது வாங்குவதன் அவசியம் என்றார். வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் பேசுகையில், குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின்கீழ் இயந்திரநடவு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கர்

ஒன்றுக்கு ரூ 4 ஆயிரம் மானியம் வழங்கப்படுவதாக கூறினார். ஏற்பாடுகளை அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் மேனகா, உதவி தொழில்நுட்ப மேலாளர் ரெத்தினம் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்கள் சம்பத்குமார், அசோகன் ஆகியோர் செய்திருந்தனர்.

**பசுந்தாளுர பயிர் தக்கைப்பூண்டு சாகுபடி வயல்களில் ஆய்வு**

திருத்துறைப்பூண்டி : திருத்துறைப்பூண்டி மற்றும் முத்துப்பேட்டை வட்டாரத்தில் தமிழக அரசு முதல்வர் குறுவை தொகுப்பு திட்டத்தின்கீழ் இலவச உழவு செய்து பசுந்தாளுர பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் கச்சனம், பழையங்குடி, மணலி, நெடும்பலம், எடையூர், பின்னத்தூர், பாண்டிகோட்டகம், உதயமார்த்தாண்டபுரம் கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பசுந்தாளுர பயிர்களை திருவாரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மயில்வாகணன், வேளாண்மை துணை இயக்குநர் பாண்டியராஜன் ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து வேளாண்மை இணை இயக்குநர் மயில்வாகணன் கூறுகையில், திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் 2500 ஏக்கர், முத்துப்பேட்டை வட்டாரத்தில் 2,250 ஏக்கரில் பசுந்தாளுர பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சாகுபடி செய்யப்பட்டுள்ள பசுந்தாளுர பயிர் சாகுபடி செய்வதால் மண்ணில் வளம் பெருகும், நுண்ணுயிரிகள் அதிகரிக்கும், மண்ணில் காற்றோட்டம் அதிகரிக்கும், இடப்படும் ரசாயன உரம் பயிருக்கு முழு அளவில் கிடைக்கும் வாய்ப்பு அதிகரிக்கும். எனவே விவசாயிகள் பசுந்தாளுர பயிர் சாகுபடி செய்யலாம்.

இதற்கான ஆலோசனையை வேளாண்மைத்துறை அதிகாரிகளிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம். தற்போது விவசாயிகள் பசுந்தாளுர பயிர் சாகுபடி செய்வதில் அதிக ஆர்வத்துடன் உள்ளனர் என்றார். வேளாண்மை உதவி இயக்குநர் சிவகுமார், வேளாண்மை அலுவலர்கள் பாஸ்கர், அசோக், வேளாண்மை துணை அலுவலர்கள் துரைராஜன், சங்கர், வேளாண்மை உதவி அலுவலர்கள் மகேஷ், சாமிநாதன், ஜோதிகணேசன், ரமேஷ்குமார், சிவரஞ்சனி, மகரஜோதி பங்கேற்றனர்.

## இயந்திர உதவியுடன் நெல்நடவு தீவிரம்

உத்தமபாளையம், : உத்தமபாளையம் பகுதியில் இயந்திரத்தின் மூலம் நாற்று நடும் பணி நடைபெற்று வருகிறது.உத்தமபாளையம், ராமசாமிநாயக்கன்பட்டி, கோகிலாபுரம், ராயப்பன்பட்டி உள்ளிட்ட ஊர்களில் முதல்போக நெல் நடவிற்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். இயந்திரத்தில் நடவு செய்தால், அதிக விளைச்சல் பெறுவதுடன், உரமேலாண்மை, களை எடுத்தல் உள்ளிட்ட விவசாய பணிகளும் மிக எளிதாக இருக்கும்.

எனவே, வேளாண்மைத்துறை அதிகாரிகள் இயந்திரநடவு பற்றி விவசாயிகளுக்கு விளக்கினர். நிகழ்ச்சியில் உத்தமபாளையம் வேளாண்மைத்துறை உதவிஇயக்குநர் பாண்டி மற்றும் வேளாண்மைத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

ராமநாதபுரம், : மாவட்ட கலெக்டர் அலுவலக ஊராட்சி மன்ற கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும்கூட்டம் வரும் 19ம் தேதிகாலை 11.30 மணிக்கு நடக்கிறது.கூட்டத்திற்கு கலெக்டர் நடராஜன் தலைமை தாங்குகிறார். குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளும் விவசாய சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டு விவசாயம் சம்பந்தப்பட்ட பொருள்களை விவாதிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. விவசாயம் சம்பந்தமான கோரிக்கைகள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதனை கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார்.